# கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010

**தொலைபேசி : 04362 - 227782,226720**

**2013-14 கல்வியியல் நிறைஞர் (M.Ed.,) பட்டப்படிப்பில் சேர்வதற்குரிய விண்ணப்பப் படிவம்.**

| அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும் | |
|---|---|
| பெற்ற மதிப்பெண் சதவிகிதம் | ஒதுக்கீடு |
| | |

( கையேட்டில் உள்ள விவரங்களைப் படித்தபின் பூர்த்தி செய்யவும்)

பாஸ்போர்ட் அளவு புகைப்படம் அதன் மேல் மாணவர் கையொப்பம் இடவேண்டும்

1. விண்ணப்பதாரர் பெயர்

அ) தமிழ்

ஆ) ஆங்கிலம் (பெரிய எழுத்துக்களில்)

2. பிறந்த தேதி

3. பாலினம் ஆண் ☐ பெண் ☐

4. தமிழ்நாட்டைச் சார்ந்தவரா? ஆம் ☐ இல்லை ☐

5. நாடு

6. மதம்

7. இனம் தாழ்த்தப்பட்டோர் ☐ அருந்ததியினர் ☐ பழங்குடியினர் ☐ மிபிவ ☐

பிவ ☐ பிவமு ☐ இதர வகுப்பினர் ☐

8. பெற்றோர் / பாதுகாவலர் / கணவர் பெயர்

தொழில்

9. விண்ணப்பதாரர் தொடர்பு முகவரி

| |
|---|
| பெயர் |
| |
| |
| |
| மாவட்டம் |
| அஞ்சல் குறியீட்டு எண் : |

தொலைபேசி எண் :

10 . கல்வித் தகுதி

அ) 10 - ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாதமும் ஆண்டும் [ ]
ஆ) மேல்நிலைப் பள்ளி படிப்பு தேர்ச்சி பெற்ற மாதமும் ஆண்டும் [ ]
இ) இளநிலைப்பட்டப் படிப்பு தேர்ச்சி பெற்ற மாதமும் ஆண்டு [ ]

ஈ) இளங்கல்வியியல் பட்ட விபரம்

| பல்கலைக்கழகம் | | | தேர்ச்சி பெற்ற ஆண்டு | |
|---|---|---|---|---|
| இளங்கல்வியியல் பட்ட வகுப்பில் | மொத்த மதிப்பெண் | பெற்ற மதிப்பெண் | கூடுதல் மதிப்பெண்கள் | மதிப்பெண் விழுக்காடு நான்கு தசமங்களில் |
| எழுத்துத் தேர்வு | | | | [ ][ ][.][ ][ ][ ][ ] |
| செய்முறைத்தேர்வு | | | | |

**குறிப்பு: விழுக்காட்டை துல்லியமாகக் கணக்கிட்டுக் குறிக்கவும். கூடுதலாக விழுக்காடு குறிப்பிடப்பட்டிருப்பின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.**

11. உயர்கல்வித் தகுதி

எம்.ஏ / எம் .எஸ்சி [ ] தேர்ச்சி பெற்ற ஆண்டு [ ]

12. முன்னாள் படைவீரரின் மகனா/மகளா?(சான்று இணைக்க வேண்டும்) ஆம் [ ] இல்லை [ ]

13. மாற்று திறனாளியா?(Differently Abled Persons)ஆம் [ ] இல்லை [ ] ஆம் எனில் விழுக்காடு [ ]

பார்வையற்றவரா? ஆம் [ ] இல்லை [ ] ஆம் எனில் விழுக்காடு [ ]

14. மேல்நிலைப் பள்ளியில் பகுதி 1 இல் தமிழைப் பயின்றவரா ? ஆம் [ ] இல்லை [ ]

விண்ணப்பத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளவை அனைத்தும் சரியானவை என உறுதியளிக்கிறேன்.கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனப் பின்னர் தெரிய வந்தால் என் சேர்க்கை நீக்கத்திற்குள்ளாகும் என நன்கு அறிவேன்.

இடம் :

நாள் : பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம் விண்ணப்பதாரர் கையொப்பம்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

(தேசியத் தர மதிப்பிட்டுக் குழுவின் B++ தரம் பெற்றது)

## தஞ்சாவூர் - 613 010

## கல்வியியல் நிறைஞர் முழுநேரம்(எம்.எட்.,)

## விண்ணப்பம்  மற்றும் சேர்க்கைக் கையேடு

## 2013 – 2014

**தொ.பே : 04362 -  227782, 226720**

www.tamiluniversity.ac.in

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

**(தேசியத் தர மதிப்பிட்டுக் குழுவின் B++ தரம் பெற்றது)**

## தஞ்சாவூர் - 613 010

**கல்வியியல் நிறைஞர் முழுநேரம்**

**Master of Education Regular (M.Ed.)**

(தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் ஒப்புதல் பெற்றது)

## விண்ணப்பம்  மற்றும் சேர்க்கைக் கையேடு

Application  and Prospectus

2013 – 2014

தமிழ்ப் பல்கலைக்கழகம்

வாகை வளாகம், திருச்சி சாலை, தஞ்சாவூர் - 613 010

தொ.பே 04362 -  227782, 226720

www.tamiluniversity.ac.in

விலை  Ï 600/- மட்டும்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

## கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை

## தஞ்சாவூர் - 613 010

தொலைபேசி 04362-227782,226720

# 2013 - 14 கல்வியியல் நிறைஞர் முழுநேரம் (M.Ed.,) பட்டப் படிப்பு சேர்க்கைக் கையேடு (PROSPECTUS)

### தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓர் உயர்நிலை ஆய்வு மையமாக 1981ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது. இப் பல்கலைக்கழகம் தஞ்சை - திருச்சி நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஏறத்தாழ 900 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஓர் உயர்கல்வி நிறுவனமாகும். இப் பல்கலைக்கழகத்தில் ஐந்து புலங்களின் கீழ் இருபத்து ஐந்து துறைகள் செயல்பட்டுவருகின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளிலும் முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகள் உள்ளன. பல்துறை ஆய்வுகளும் ஊக்குவிக்கப்படுகின்றன.

மேலும், பாராளுமன்ற வடிவமைப்பில் உயர்நிலை ஆய்வுக்கு உறுதுணையாக ஒரு நூலகம் அமைந்துள்ளது. இதில் 134466 நூல்களும் 334 பருவ இதழ்களும் ஆய்வுப் பயன்பாட்டிற்கு இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத் துறைகள் அனைத்தும் கணிப்பொறி வசதியைப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தத்தம் துறைகளில் சிறப்பான பட்டங்களையும், பயிற்சிகளையும் ஆய்வு அனுபவங்களையும் பெற்றுள்ளதுடன் அரிய பல ஆய்வு நூல்களையும் எழுதி அளித்துள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாணவர்களின் பயன்பாட்டிற்காகவும் பயிற்சிக்காகவும் கணினி வசதிகள் உள்ளன. இதில் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் இணைய இணைப்பும் உள்ளது. முதுநிலை மாணவர்கள் நாட்டு நலப்பணித்திட்டத்தில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பும் உள்ளது.

2006 - 2007 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டுப் பல்வேறு செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வினையொட்டி இரு புதிய துறைகள் தொடங்கப்பட்டன. மேலும் 2006 - 2007 ஆம் கல்வியாண்டு முதல் விருப்பம் சார் தெரிவு முறை (CBCS) செயல்படுத்தப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கென வேலைவாய்ப்பு வழிகாட்டும் மையம் செயல்படுகிறது. மாணவர்கள் குறைதீர்க்கும் அமைப்பும், முன்னாள் மாணவர்கள் அமைப்பும் மாணவர்கள் நலன் கருதிச் செயல்பட்டு வருகின்றன. மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதி வசதி உள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தேசிய தரமதிப்பீட்டுக் குழுமம் (NAAC) B++ தரம் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழக நல்கைக்குழு பல்வேறு திட்டங்களும் கல்வி உதவித் தொகைகளும் ICCR, ICHR, ICPR போன்ற இந்திய ஆய்வுக்கழகங்கள் மூலம் பல்வேறு திட்டங்களுக்குக் கூடுதல் நிதியுதவியும் கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

**தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் துறைகள் உள்ளன.**

1.சிற்பத்துறை

2. இசைத்துறை

3. நாடகத்துறை

4. ஓலைச்சுவடித்துறை

5.அரிய கையெழுத்துச்சுவடித்துறை

6.கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை

7. நீரகழாய்வு மையம்

8. அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை

9. மொழிபெயர்ப்புத்துறை

10. அகராதியியல் துறை

11. சமூக அறிவியல் துறை

12. அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை

13. கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை

14. இலக்கியத்துறை

15. மொழியியல்துறை

16. தத்துவ மையம்

17. பழங்குடி மக்கள் ஆய்வு மையம்

18. நாட்டுப்புறவியல் துறை

19. இந்தியமொழிகள் பள்ளி

20. சித்த மருத்துவத்துறை

21. தொல்லறிவியல் துறை

22. தொழில் மற்றும் நில அறிவியல் துறை

23. கட்டடக்கலைத்துறை

24. கணிப்பொறி அறிவியல் துறை

25. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை

## கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை

## (Department of Education and Management)

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை 2007-2008 கல்வியாண்டில் தொடங்கப்பட்டது.

இத்துறையில் கீழ்வரும் படிப்புகள் உள்ளன.

| | |
|---|---|
| 1. முனைவர் பட்டம் (கல்வியியல்) | முழுநேரம் / பகுதி நேரம் |
| 2. ஆய்வியல் நிறைஞர் பட்டம் (கல்வியியல்) | முழுநேரம் / பகுதி நேரம் |
| 3. கல்வியியல் நிறைஞர்(எம்.எட்) | முழுநேரம் |
| 4.இளங்கல்வியியல் பட்டம் (பி.எட்) | முழுநேரம் |

## கல்வியியல் கல்லூரி - இளங்கல்வியியல்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறையின், கல்வியியல் கல்லூரி 2007 - 2008 கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. இது தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அறிந்தேற்புப் பெற்றுள்ளது. இதில் இளங்கல்வியியல் ஓராண்டு முழுநேரப் பட்டப்படிப்பு இருபாலருக்கும் வழங்கப்படுகிறது. கல்வியியல் கல்லூரியில் 100 மாணவ, மாணவிகள் ஒவ்வொரு கல்வியாண்டிலும் சேர்க்கப்படுகின்றனர். உயர் கல்வித்தகுதிகள் கொண்ட பேராசிரியர்களால் வகுப்புகள் சிறப்பான முறையில் நடத்தப்படுகின்றன. நன்கு வசதி படைத்த ஆய்வகங்கள், நூலகம் உள்ளன. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களது அனுமதியோடு அருகில் உள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பான முறையில் கற்பித்தல் பயிற்சி அளிக்கப்படுகிறது. உடற்கல்வி, சமூகப்பணி போன்ற பாட இணைச்செயல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. வருடந்தோறும் மாணவர்கள் 100% தேர்ச்சி பெற்றுவருகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்பு வழிகாட்டி மையத்தின் வளாக நேர்காணல் (Campus interview) மூலம் 67% மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 37% மாணவர்கள் உயர்கல்விக்கு சென்றுள்ளனர்.

**கல்வியியல் நிறைஞர்(எம்.எட்.) - குறிக்கோள்கள்**

கல்வியியல் நிறைஞர் பட்டம் பயின்ற மாணவர்

- ✓ கல்வியின் தத்துவ மற்றும் சமூக அடிப்படைகளை புரிந்துகொள்வார்
- ✓ மனித நடத்தைகளையும் ஆளுமைகளையும் அறிந்துகொள்வார்
- ✓ கற்போரை ஊக்குவிப்பார்
- ✓ கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பாங்கை அறிவார்
- ✓ கற்பித்தல் கோட்பாடுகளை உள்நாட்டு-பன்னாட்டு அரங்கு ஏற்ற வகையில் புரிந்துகொள்வார்
- ✓ கல்வியை மேலாண்மை செய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிதி அளித்தல் ஆகியவற்றைப் புரிந்துகொள்வார்
- ✓ கல்வியில் ஆய்வு மேற்கொள்ளத் தகுதி பெற்றவராவார்

**சேர்க்கை விவரம்**

2013 - 14 ஆம் கல்வியாண்டில், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல துறையில் எம்.எட்., பட்டப்படிப்பிற்கு இருபாலர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சேர்கைக்கான விண்ணப்பப்படிவங்கள் 01.07.2013 முதல் 31.07.2013 வரை அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிவரை தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைப் பிரிவில் வழங்கப்படும். விண்ணப்பத்தினை நேரில் பெற விரும்புவோர் ரூ.600/- ஐ பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தாழ்த்தப்பட்ட / பழங்குடி வகுப்பினருக்கு ரூ.300/- (சாதிச் சான்றிதழின் சான்றொப்பமிடப்பட்ட நகல் அளிக்க வேண்டும்). விண்ணப்பத்தினை அஞ்சலில் பெற விரும்புவோர் The Registrar, The Tamil University. Thanjavur - 613 010 என்ற பெயரில் தஞ்சாவூரில் காசாக்கும் வகையில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட ரூ.650/350 க்கான கேட்பு வரைவோலையுடன் (Demand Draft payable at Thanjavur) தன் முகவரியிட்ட A4 அளவுள்ள உறையைச் சேர்த்து அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்யும் முன்பு விவரக் கையேட்டை (Prospectus) தெளிவாகப் படிக்க வேண்டும்.

**எம்.எட்.பட்டப் படிப்பில் சேர்க்கைக்கான விதிமுறைகள்(Regulations)**

**1. தகுதி:** அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகத்தில் இளங்கல்வியியல் பட்டத்தேர்வில் (B.Ed) 50 விழுக்காட்டிற்கு(செய்முறை மற்றும் எழுத்துத்தேர்வில்) குறையாமல் பெற்றிருக்க வேண்டும். தமிழக அரசின் இடஒதுக்கீட்டு விதி முறைகளின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறும். அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் இட ஒதுக்கீட்டு முறைகள் பின்பற்றப்படும்.

**2. படிப்புக்காலம்**: ஒரு கல்வியாண்டிற்கு 180 வேலை நாட்கள் - 1080 மணி நேரம் (சேர்க்கைக்கு 10 நாட்களும், தேர்விற்கு 10 நாட்களையும் தவிர்த்து).

**3. பயிற்று மொழி:** தமிழ்

**4. படிப்பிற்கான பாடங்கள்(Subjects of studying)**

அ) முதன்மைப்பாடம் (Core Subject)
ஆ) விருப்பப்பாடம் (Elective Subject)
இ) ஆய்வேடு (Dissertation)

**அ) முதன்மைப்பாடம்:**

1. கல்வித் தத்துவங்களும் சமூகவியலும்
2. முற்போக்குக் கல்வி உளவியல்
3. கல்வியியல் ஆராய்ச்சி

**ஆ) விருப்பப்பாடம் :**

மாணவர்கள் ஏதேனும் இரண்டு பாடங்களைக் கீழ்க்கண்ட குழு ஒன்றிலிருந்து ஒன்றும் குழு இரண்டிலிருந்து மற்றொன்றும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குழு-1

1.தொடக்க மற்றும் இடைநிலைக்கல்வி
2.ஆசிரியர் கல்வி
3.முறைசாரா கல்வி
4. ஒப்பீட்டுக் கல்வி

குழு-2

5.கலைத்திட்ட மேம்பாடும் - கற்பித்தல் நுட்பவியலும்
6.பெண் கல்வி
7.செய்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம்
8.சிறப்புக் கல்வி

## ஆய்வேடு (Dissertation)

I) மாணவர்கள் 120 பக்கங்களுக்கு குறையாமல் ஆய்வேட்டினை சமர்ப்பிக்க வேண்டும்.

II) எழுத்துத் தேர்வு முடித்து 10 நாட்களுக்குள் ஆய்வேட்டினைச் சமர்பிக்க வேண்டும்.

III) ஆய்வேட்டினைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ சமர்ப்பிக்கலாம்.

## 5. தரப்புள்ளி பங்கீடு (Distribution of Credits)

கல்வியியல் நிறைஞர் படிப்பிற்குத் தகுதி பெறக் குறைந்த அளவு 36 தரப்புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும்.

## 6. தேர்வுகள்(Examinations)

குறைந்த அளவு ஒவ்வொரு முதன்மைப் பாடத்திற்கும் 6 தரப்புள்ளி எனவும் விருப்பப்பாடத்திற்கு 5 தரப்புள்ளி எனவும் ஆய்வேட்டிற்கு 6 தரப்புள்ளி எனவும் வாய்மொழித்தேர்விற்கு 2 தரப்புள்ளி எனவும் கணக்கிடப்படும். 85 விழுக்காடு வருகைபுரியாத மாணவர் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

## தேர்வுத் திட்டம் (Scheme of Examination)

கீழ்க்கண்ட முறையில் தேர்வுத்திட்டம் பின்பற்றப்படும்.

| முதன்மைப் பாடம் விருப்பப்பாடம் | பாடங்கள் | காலம் | தரப்புள்ளி (Credit) | தேர்வு மதிப்பெண்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | அ.ம | பு.ம | மொத்தம் |
| முதன்மைத்தாள் I | கல்வித் தத்துவங்களும் சமூகவியலும் | 3 மணி | 6 | 25 | 75 | 100 |
| முதன்மைத்தாள் II | முற்போக்கு கல்வி உளவியல் | 3 மணி | 6 | 25 | 75 | 100 |
| முதன்மைத்தாள் III | கல்வியியல் ஆராய்ச்சி | 3 மணி | 6 | 25 | 75 | 100 |
| விருப்பப்பாடம் I | | 3 மணி | 5 | 25 | 75 | 100 |
| விருப்பப்பாடம் II | | 3 மணி | 5 | 25 | 75 | 100 |
| ஆய்வேடு | | | 6 | | | 150 |
| வாய்மொழித்தேர்வு | | | 2 | | | 50 |
| | | | 36 | | | .700 |

**அகமதிப்பீட்டு முறை**

தேர்வு: 10 மதிப்பெண்கள்

(குறைந்த அளவு மூன்று வகுப்பு தேர்வுகளின் சராசரி)

ஒப்படைப்பு / கருத்தரங்கம்: 10 மதிப்பெண்கள்

(குறைந்த அளவு மூன்று ஒப்படைப்பு கருத்தரங்கங்களின் சராசரி)

கற்றல் கற்பித்தலில் வகுப்பறை பங்கேற்பு : 5 மதிப்பெண்கள்

## 7. தேர்ச்சி மதிப்பெண் தகுதி (Qualifying Marks)

எழுத்துத்தேர்வு, ஆய்வேடு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகிய ஒவ்வொன்றிலும் 50 விழுக்காடு பெற்றவர்கள் தேர்ச்சி பெற்றவர்கள். புறத்தேர்வில் குறைந்த பட்சம் 38 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். தேர்ச்சி பெறாத மாணவர்கள் எதிர்வரும் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**உடனடித்தேர்வு(Instant examination)**

தேர்ச்சி பெறாத மாணவர்கள் பல்கலைக்கழகம் நிர்ணயிக்கும் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திய பின்னர் உடனடித் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

60 விழுக்காட்டிற்குமேல் மதிப்பெண் பெற்றவர்கள் **முதல் வகுப்பில் தேர்ச்சி** பெற்றார் என்றும், 60 க்கு குறைவாகவும் 50 க்கு மேல் விழுக்காடு பெற்றவர்கள் **இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி** பெற்றவர்கள் என்றும் 75 விழுக்காடுகளுக்கு மேல் பெற்றவர்கள் **சிறப்பு நிலையில் தேர்ச்சி** பெற்றோர் என்றும் அறிவிக்கப்படுவர்.

**இட ஒதுக்கீடு**

இன இட ஒதுக்கீடு அடிப்படையில் கீழ்க்காணும் விழுக்காட்டில் சேர்க்கை நடைபெறும்.

| ***இனம்*** | ***மதிப்பெண் விழுக்காடு*** |
|---|---|
| *பொதுப் போட்டி (O.C)* | *31%* |
| *பிற்பட்ட வகுப்பு (B.C) ,முகமதியர்* | *30% (26.5+3.5)* |
| *மிகவும் பிற்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் (MBC/DNC)* | *20%* |
| *தாழ்த்தப்பட்ட வகுப்பு (SC), அருந்ததியினர் (SCA)* | *18% (15+3)* |
| *பழங்குடியினர் வகுப்பு (ST)* | 1% |

தமிழ்நாட்டுக் குடிமக்கட்கு மட்டுமே இந்த இன ஒதுக்கீடு பொருந்தும். முன்னாள் படை வீரரின் மகன் / மகளுக்கென ஓரிடம் ஒதுக்கீடு செய்யப்படும். மாற்று திறனுடையோர்களுக்கு (Differently Abled Persons) 3 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்படும் (உடற் குறைபாடு மற்றும் பார்வை குறைபாடு).

**விண்ணப்பத்தை நிறைவு செய்வதற்கான வழிமுறைகள்**

விண்ணப்பதாரர் தமது மதிப்பெண் விழுக்காட்டினைத் தெளிவாக, துல்லியமாகக் கணக்கிட்டு எழுதவேண்டும். **குறிக்க வேண்டிய இடத்தில் நான்கு இலக்கப் பின்னங்களில் தெளிவாக எழுத வேண்டும்.(எ.கா. 75.1617)** நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் குறிப்பிட்ட தேதிக்குள் அளிக்கப்படாவிட்டாலும், வரையறுக்கப்பட்ட வடிவத்தில் இல்லையென்றாலும், முழுமையாக நிறைவு செய்யப்படாமல் இருந்தாலும், தவறான தகவல்கள் மற்றும் தவறான மதிப்பெண்கள் குறிக்கப்பட்டிருந்தாலும், சான்றொப்பம் (Attested) இடப்பட்ட இனச்சான்றிதழின் நகல் இணைக்கப்படாவிட்டாலும், அறிவுறுத்தியவகையில் முழுமையாகப் நிறைவு செய்யப்படாமல் குறையுடையதாக உள்ளதெனக் கருதப்பட்டாலும் எவ்வித அறிவிப்புமின்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் இது தொடர்பாக மேற்கொண்டு எந்தவிதத் தொடர்பும் கொள்ள வேண்டாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**கலந்தாய்விற்கு அழைத்தல்**

விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், தர வரிசை, தமிழ்நாடு அரசின் இன ஒதுக்கீட்டு அடிப்படையில் கலந்தாய்விற்குத் தற்காலிகமாக விண்ணப்பதார்கள் அழைக்கப்படுவார்கள். கலந்தாய்வின் முடிவில் விண்ணப்பதாரரின் தெரிவு மற்றும் சேர்க்கை உறுதி செய்யப்படும்.

கலந்தாய்விற்குக் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் வராதவர்களின் தெரிவு ஏற்கப்பட மாட்டாது. கலந்தாய்வின்போது சான்றிதழ் சரிபார்த்தலுக்கும், அதன் பிறகு சேர்க்கையின்போதும் சான்றிதழ்களை வழங்க வேண்டும். கலந்தாய்விற்கு வரும் விண்ணப்பதாரர், நிரந்தர இனச்சான்றிதழ் அட்டையுடன் (Permanent Community Card) வரவேண்டும். பழங்குடி இனத்தவராயின் (ST) தங்கள் சொந்த ஊரின் வருவாய்க் கோட்ட (RDO) அல்லது மாவட்ட ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட இனச் சான்றிதழைக் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அரசு மருத்துவ அதிகாரியிடம் இருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழை அளிக்க வேண்டும்.

**விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய சான்றிகழ்கள்**

அ. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்

ஆ. பட்ட வகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் பட்டச் சான்றிதழ்

இ. இளங்கல்வியியல்(பி.எட்) மதிப்பெண் சான்றிதழ்

ஈ. முதுநிலை / எம்.ஃபில் / பி.எச்டி மதிப்பெண் சான்றிதழ் மற்றும் பட்டச் சான்றிதழ்

உ. மாற்றுச் சான்றிதழ் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ்

ஊ. இனச் சான்றிதழ்

எ. முன்னாள் இராணுவத்தினர் மகன் அல்லது மகள் என்பதற்கான சான்றிதழ் / மாற்றுத் திறனுடையோர் ( Differently Abled Persons) சான்றிதழ்.

மேற்கண்ட அனைத்துச் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட நகல்களையும் இணைக்க வேண்டும்.

**விண்ணப்ப விற்பனை கடைசி நாள். 31.07.2013 பிற்பகல் 4.30 மணி**

**நிறைவு செய்த விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள். 31.07.2013 பிற்பகல் 5.30 மணி**

**நிறைவு செய்த விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி**

**பதிவாளர் அவர்கள்**

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர் - 613 010**